(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(4).]

# பாராளுமன்றம்

## 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 யூலை 22 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2021 ஆகஸ்ட் 03, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நிதிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 19 ஆம் திகதிய 2224/2 ஆம் இலக்க மற்றும் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, அவ்வர்த்தமானப் பத்திரிகை திருத்தப்பட்டு, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ், 2021 யூலை 06 ஆம் திகதிய 2235/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் கீழ், பெறுமதி சேர் வரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 மே 20 ஆம் திகதிய 2228/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுகாதார அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 441 - நிகழ்ச்சித்திட்டம் 01 மற்றும் 02 — † 2021 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசிற்குரிய ஏனைய எந்தவொரு நிதியத்திலிருந்தும் அல்லது பணமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம், அரசினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் ரூபா பதினொராயிரத்து எண்ணூற்று நாற்பத்தி மூன்று தசம் ஏழு மில்லியன் (ரூபா 11,843,700,000) ஐ மிகைக்காத மேலதிக தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படலாமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்பு 441** - | ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் | | |
| **நிகழ்ச்சித்திட்டம் 01** - | தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | | |
| | மீண்டெழும் செலவினம் | ரூ. | 115,700,000 |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 19,000,000 |
| **நிகழ்ச்சித்திட்டம் 02** - | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
| | மீண்டெழும் செலவினம் | ரூ. | 11,455,000,000 |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 254,000,000 |
| | மீண்டெழும் செலவினம் | ரூ. | 11,570,000,000 |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 273,000,000 |
| | **மொத்தச் செலவினம்** | **ரூ.** | **11,843,700,000** |

(ரூபா பதினொராயிரத்து எண்ணூற்று நாற்பத்தி மூன்று தசம் ஏழு மில்லியன்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2021 யூலை 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 200,000,000,000 ஆகும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
**(2021, ஆகஸ்ட் 05, வியாழக்கிழமை)**

1900/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற ஒதுக்கங்கள் அல்லது முகாமைத்துவ பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த ஒவ்வோரு ஒதுக்கம் அல்லது முகாமைத்துவ பிரதேசம் அவ்வாறு ஒதுக்கம் அல்லது முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒவ்வொன்றினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அந்த வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) ஏதேனும் பிதேசத்தை, ஒதுக்கம் அல்லது முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனம் செய்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலொன்றை இரத்துச்செய்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அத்தகைய வர்த்தமானி அறிவித்தல் ஒவ்வொன்றினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தின் கீழ், எதிர் காலத்தில் ஒதுக்கங்கள் அல்லது முகாமைத்துவ பிரதேசங்களாக பிரகடனப்படுத்தத் திட்டமிட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1901/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் காணப்படும் ஒதுக்கங்களின் அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஒதுக்கம் அல்லது முகாமைத்துவப் பிரதேசம் அவ்வாறு ஒதுக்கமாக அல்லது முகாமைத்துவப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யாதேனுமொரு பிரதேசம், ஒதுக்கமாக அல்லது முகாமைத்துவப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி அதிகார சபையின் கீழ் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கங்களாக அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1902/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் காணப்படும் ஒதுக்கங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஒதுக்கமும் அவ்வாறு ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யாதேனுமொரு பிரதேசம், ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தின் கீழ் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கங்களாக அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1903/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் ஒதுக்கங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஒதுக்கமும் அவ்வாறு ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யாதேனுமொரு பிரதேசம், ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தின் கீழ் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கங்களாக அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1904/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை, மஹஓயா, பொல்லேபெத்த, கல்வலயாய பாதுகாக்கப்பட்ட வனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பாரியளவிலான காடழிப்பு தொடர்பில் அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை வெட்டி வெளியாக்கும்போது சுற்றாடல் சட்டத்துக்கு அமைய நடவடிக்கையெடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கடிதத்தின் பிரதியொன்று பெற்றுத்தரப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி வனத்தில் வெட்டி வெளியாக்கப்பட்ட பகுதிகள் பரிசோதிக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறு வெட்டி வெளியாக்கப்பட்ட போது சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், ஏற்பட்டுள்ள சூழல் பாதிப்பின் தன்மை யாது என்பதையும்;

(vi) மேற்படி சூழல் பாதிப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1905/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹஓயா மகாவலி வதிவிடத் திட்ட முகாமையாளர் அலுவலகத்தின் கீழ் காணப்படுகின்ற காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) அவற்றில் இதுவரை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாதுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

(iii) அதற்குரிய உத்தியோகபூர்வ ஆவணம் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹஓயா, பொல்லேபெத்த விவசாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள கம்பெனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பெனிக்கும் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி காணிகளில் ஒரு ஏக்கர் காணி விற்பனை செய்யப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அதன் மூலம் அறவிட்டுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி காணிகள் ஒப்பந்தங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின், அவ்வொப்பந்தங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி (ஆ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனிகளினால் மேற்கொள்ளப்படும் விவசாயக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அவை தொடர்பிலான கருத்திட்ட அறிக்கைகள் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது உரிய ஒப்பந்த நிபந்தனைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இல்லையெனில், அதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1907/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளின் அளவு ஹெக்டேயர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றில் மகாஓய மற்றும் பதியதலாவ பிரதேச செயலகப் பிரிவுகளுக்குச் சொந்தமான காணிகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மகாஓய கல்வலயாய பிரதேசத்தின் வனப்பகுதி, திணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் காணப்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) மேற்படி திணைக்களம் மேற்குறிப்பிட்ட வனப்பகுதியின் நிருவாகத்தினை கைவிட்ட திகதியும் அதற்கான காரணங்களும் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திணைக்களத்தினால் கல்வலயாய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு வனப் பயிர்ச்செய்கை கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட வருடம் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) பயிரிடப்பட்ட வனப்பகுதியை அளந்து எல்லைக் கற்கள் இடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், எல்லைக் கற்கள் இடப்பட்ட வருடமும் அதற்கென செலவிடப்பட்ட தொகையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கல்வலயாய பிரதேசத்தின் வனப்பகுதிக்குரிய காணிகளில் அரச வன ஒதுக்கங்களாக வர்த்தமானியில் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள காணியின் அளவு ஹெக்டேயர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) அக் காணிகள் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானியை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2110/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2111/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2112/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2113/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2114/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வவுனியா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2115/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்” எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் “வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்” எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2116/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்” எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் “வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்” எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2021 செப்தெம்பர் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

67/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்திற்கமைய கழிவு முகாமைத்துவம் எனும் விடயம் மாகாண சபைகளின் கீழ் வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், மாகாண சபை முறை ஆரம்பிக்கப்பட்டது முதல் இது வரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென பிரத்தியேகமான நிறுவனங்களை அமைத்துள்ள மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான விசேட நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளுக்கென விசேட நிறுவனத்தை அமைப்பது தொடர்பில் அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

199/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் காணப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவற்றில் தனியார் கட்டடங்களில் அமைச்சுக்களை பேணிவரப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

(iii) அவற்றுக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகைத் தொகை;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தனியார் கட்டடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்களை அரசாங்க கட்டிடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

242/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன உதிரிப் பாகங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

355/2020

கௌரவ புத்திக பத்திரண, — நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிநீர் வழங்கப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள வாவிகளின் நீரின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(ii) E-coli உள்ளிட்ட பல்வேறு கிருமிகள் கலந்துள்ளதால் இந்நீர் மக்களின் சுகாதாரத்திற்குப் பாதகமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வாவிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வாவிகளிலுள்ள நீரின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

519/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வாழைச்சேனையில் அமைந்துள்ள கடற்றொழில் துறைமுகத்தில் சாதாரண இழுவைப் படகுகளை கையாளுவதற்கான வசதிகள் உள்ள போதும் அதன் நுழைவாயில் மற்றும் ஆழம் போதுமானதாக இல்லாததால் மிகப் பெரிய இழுவைப் படகுகளை கையாளுதல் பிரச்சினையான விடயமொன்றாகி உள்ளதோடு, இதன் காரணமாக உள்நாட்டு கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதன் தேவையொன்று உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

543/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விசாரா பதவியணிகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

671/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பிங்கிரிய கிணியம நிர்ப்பாசனத் திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட எதிர்கால பணிகளுக்குச் செலவாகும் நிதி எவ்வாறு திரட்டப்படும் என்பதையும்;

(ii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்காக எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக நீரைப் பெறும் குளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

757/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) காட்டு யானைகளின் நடமாட்டம் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) காட்டு யானைகள் அதிகளவில் நடமாடும் தேசிய வனப் பூங்காக்கள் மற்றும் வன ஒதுக்கங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) யானை கொரிடோக்கள் இருப்பின், அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) யானை கொரிடோக்களுக்கு குறுக்கே கிராமங்கள் அல்லது மக்கள் குடியிருப்புப் பகுதிகள் இருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரை மாவட்டத்தில் யானை - மனித மோதல் காரணமாக —

(i) உயிரிழந்த ஆட்கள் மற்றும் யானைகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கையானது வருட வாரியாக எவ்வளவென்பதையும்;

(iii) உயிரிழந்த மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு நபர் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மாவட்டத்தில் யானை-மனித மோதலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள புதிய நடவடிக்கைகள் யாவை என்பதை மேலும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

803/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/வட்டக்கச்சி மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையின் பொருட்டு புதிய கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமை காரணமாக கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் பணிகள் இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிய அமைச்சு யாது என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை முழுமையாக நிர்மாணிப்பதற்குத் தேவையான தொகை எவ்வளவு;

(ii) அதற்கென நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படும் திகதி யாது;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக அதனை வழங்க எடுக்கும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

871/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) திருகோணமலை மாவட்டத்திலுள்ள டிப்போக்களின் மனித வளம் மற்றும் அந்த டிப்போக்களில் காணப்படும் பேரூந்துத் தொகுதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 செப்தெம்பர் 24, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

85/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகாவலி வலயங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களின் காணிகளுக்கான உரித்துப் பத்திரங்களை வழங்கும் வழிமுறை யாது என்பதையும்;

(ii) மக்கள் நீண்ட காலமாக வசித்து வரும் வளவ வலயத்தின் ஒரு சில காணிகளுக்கு உரித்துப் பத்திரங்களை வழங்கும்போது, அத்தகைய காணிகளுக்காக விலை மதிப்பு செய்யப்பட்டுள்ள தொகை அநீதியானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அவ்விடயம் தொடர்பாக இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) மகாவலி வலயங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களின் காணிகளுக்கு நியாயமான வரிப் பணத்தின் அடிப்படையில் உரித்துப் பத்திரம் வழங்க எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(v) இவ்விடயம் தொடர்பில் செயலாற்றும் நிறுவனங்களின் செயற்பாடு திருப்தியாக உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

282/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 - 2014 காலப்பகுதியில் இலங்கை இராணுவத்திற்கு சில கலைஞர்கள் விசேட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி மற்றும் பதவிகள் தனித்தனியே யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தொண்டர் மற்றும் நிரந்தர படையணிகளுள் மேற்படி கலைஞர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள படையணி யாது;

(ii) அவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டிருப்பின், பயிற்சிக் காலம் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட முகாமின் பெயர் என்பன யாவை;

(iii) பயிற்சியின் பின்னர் மேற்படி ஒவ்வொரு கலைஞருக்கும் பொறுப்பளிக்கப்பட்ட கடமை, இணைப்புச் செய்யப்பட்ட படைப் பிரிவு, செலுத்தப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் தனித்தனியே யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மெற்படி ஆட்சேர்ப்புகள் சட்டரீதியானவையா;

(ii) இன்றேல், அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள மற்றும் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை மேலும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

308/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைந்துள்ள இலாபம்/நட்டம் வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடன் செலுத்த வேண்டியுள்ள அரச நிறுவனங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களின் எண்ணிக்கையும் அவற்றின் பெயர்களும் யாவை என்பதையும்;

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஒவ்வொரு அரச வங்கிக்கும் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிதி ரீதியாக வலுவூட்டுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

465/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு ஆண்டிலும் அச்சிடப்பட்டுள்ள பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) அப்போதைய கல்வி அமைச்சரது வண்ணப் புகைப்படம் இப்பாடப்புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததா;

(iv) ஆமெனில், இப்புகைப்படத்தை மேற்படி பாடப்புத்தகங்களில் அச்சிட்டு வெளியிடுவதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

755/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் -

(i) வதியும் வீட்டு தேவையுடைய ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தனியார் காணிகளில் பகுதி அளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மாதிரிக் கிராமங்களாக அமைக்கப்படுகின்ற வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

832/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கு முதன்முதலில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெற்ற வருடம் யாதென்பதையும்;

(ii) அந்த வருடத்திலிருந்து இதுவரை இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ள மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) 2014.12.31 ஆம் திகதி வரை இலங்கைக்குக் கிடைத்துள்ள மொத்த வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) 2015 தொடக்கம் 2020 வரையில் கிடைத்துள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிட்ட முதலீடுகளின் பெறுமதியானது ஒவ்வொரு கருத்திட்டத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

971/ 2020

கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களினதும் உப டிப்போக்களினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு டிப்போவினதும் உப டிப்போவினதும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் உப டிப்போவிலும் இன்றளவில் காணப்படுகின்ற பாவனைக்குப் பொருத்தமான நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் உப டிப்போவிலும் இன்றளவில் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பிராந்திய உப டிப்போ, 2001 ஆம் ஆண்டில் உப டிப்போவாக்கப்பட்டதோடு மேற்படி டிப்போ இதுவரை உப டிப்போவாகவே உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி உப டிப்போவை பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1365/2020

கௌரவ விஜித ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "சமன் கெக்குல", எம்பலவ, தெமட்டமலுவ, குருநாகல் எனும் முகவரியில் பேணிவரப்பட்ட இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பில்ம் ப்ரடக்ஷன் இன்டர்நெஷனல் கம்பனி பிரைவேட் லிமிடெட் எனப்படும் நிதி நிறுவனத்தின் நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் தடை செய்யப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நிறுவனத்தை தடை செய்ததற்கான காரணங்கள் யாவை;

(ii) அதன் பிரதானி மற்றும் பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் பெயர்கள் யாவை;

(iii) அந்த நிறுவனம் கிளைகளைக் கொண்டதாக இருப்பின், அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) அந்த நிறுவனம் மற்றும் அதன் ஒவ்வொரு கிளைக்குமுரிய சொத்துக்கள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) பணம் மற்றும் வட்டி என்பவற்றை இழந்துள்ளதன் காரணமாக மேற்படி நிறுவனத்தின் வைப்பாளர்கள் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) வைப்பாளர்களின் பெயர்கள் மற்றும் வைப்புத் தொகை என்பன தனித்தனியாக யாவை என்பதையும்;

(ii) வைப்பாளர்களின் பணத்தையும் வட்டியையும் மீள்செலுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதற்காக எடுக்கப்படும் காலம் என்பன யாவை என்பதையும்;

(iii) இவ்விடயம் தொடர்பில் தவறாளிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1829/2021

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நீதிமன்ற நடவடிக்கைகள் தாமதமடைவதன் அடிப்படையில் வழக்குகள் குவிவதன் காரணமாக பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆலோசனைகளை எதிர்பார்த்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்ற வழக்குகள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்படுவது தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2264/2021

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராதனை, கன்னொருவ பிரதேசத்தில் மகாவலி கங்கையின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள சங்கிலிப் பாலத்திற்கு அருகில் பேராதனை தாவரவியற் பூங்காவிற்கு நேரெதிர் திசையை நோக்கியதாக மகாவலி கங்கையை ஆக்கிரமிக்கும் வகையில் சட்டவிரோதமாக ஹோட்டல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி சட்டவிரோத நிர்மாணிப்பைத் தடுப்பதற்கு இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி அனிவத்த பிரதேசத்தில் தொடங்வல புதிய பாலத்திற்கு இடது புறத்தில் அமைந்துள்ள (அனிவத்தையிலிருந்து ஹல்ஒலுவ வீதிக்கு பிரவேசிக்கும் இடத்தில்) மகாவலி கங்கையின் ஒதுக்குப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான சட்டவிரோத நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சட்டவிரோத நிர்மாணிப்புகள் தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சட்டவிரோத நிர்மாணிப்புகளைத் தடுப்பதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஒக்டோபர் 05, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

257/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள, விளையாட்டுச் சங்கங்களில், கடந்த 03 வருட காலத்தில் உரிய முறையில் கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள விளையாட்டுச் சங்கங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய சங்கங்களின் நிதி நிருவாகத்தை ஒழுங்குறுத்த விளையாட்டுத்துறை அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

283/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் மனித நுகர்விற்கு உகந்த கிழங்கு வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கிழங்குகளில் காணப்படும் போசாக்குத் தன்மை தொடர்பில் முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கிழங்கு வகைகளுள் இலங்கைக்கே தனித்துவமான கிழங்கு வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்ளூர் கிழங்குகளில் போசாக்கு மற்றும் மூலிகைத் தன்மை அதிகம் என்பதையும்;

(ii) காடழிப்பு மற்றும் இரசாயனப் பசளை பயன்பாட்டின் காரணமாக மேற்படி கிழங்கு வகைகள் அரிதாகி உள்ளதென்பதையும்;

(iii) அவற்றுள் சில கிழங்கு வகைகள் தற்போது அழிந்து விட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) உள்ளூர் கிழங்கு வகைகளை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உள்ளூர் கிழங்கு வகைகளை ஏற்றுமதி செய்வதற்கும் அது சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் திட்டங்கள் உருவாக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

512/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமைச்சு திட்டமொன்றைத் தயாரித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக பாடசாலைகளைத் தெரிவு செய்கையில் பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் தேசிய பாடசாலை முறைமையை முறைசார்ந்ததாக்குவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

616/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் பாதுகாப்புச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கூட்டங்களில் பங்கேற்றோர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பாதுகாப்புச் சபை கூட்டங்களில் சட்ட ரீதியாக பங்கேற்பதற்கு உரித்துள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காணப்பட்ட சம்பிரதாயத்துக்கு முரணாக மேற்படி காலப்பகுதியில் பல்வேறு நபர்கள் பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

764/2020

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் கல்வி முறைமையை வலுப்படுத்த முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஒரு தேசிய பாடசாலையேனும் இல்லாத பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) புதிய தேசிய பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) அத்தகைய பாடசாலைகள் எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

792/2020

கௌரவ ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் வதியும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாத்தளை மாவட்டத்தில் பயிற்செய்கை நிலங்களில் தற்போது ஆக்கிரமிப்புத் தாவரங்கள் பரவி வருகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது மாத்தளை மாவட்டத்தின் விவசாயிகளுக்கும் அவர்களின் பயிற்செய்கை நிலங்களுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மாத்தளை மாவட்டத்தில் பயிர்ச்செய்கை நிலங்களில் ஆக்கிரமிப்புத் தாவரங்கள் பரவுவதைத் தடுத்து நிறுத்தி விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

977/2020

கௌரவ வேலு குமார்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடுதும்பர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள நக்கல்ஸ் மலைத் தொடரிலுள்ள நக்கல்ஸ் வன ஒதுக்கத்தை எல்லைப்படுத்தும் பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து எத்தனை அடி உயரம் கொண்டதென்பதையும்;

(ii) மேற்படி எல்லைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் உள்ளடங்கியுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நக்கல்ஸ் வன ஒதுக்கத்தில் குடியேற்றங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு குடியேற்றங்களிலும் வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நக்கல்ஸ் வன ஒதுக்கத்தில் தனியார் காணிகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) இக்காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகள் அல்லது இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

989/2020

கௌரவ ரோஹன பண்டார,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பொது நூலகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நூலகத்திற்குமென அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒவ்வொரு பதவிப் பெயரின் பிரகாரம் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பதவிகளுக்கு தகைமைமையற்ற ஆட்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிலைமையினை சீராக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1202/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தபால் திணைக்களத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் உப தபால் நிலையப் பொறுப்பதிகாரிகள் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டனர் என்பதையும்;

(ii) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இற்கு அமைவாகவும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலாக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கு ஏற்பவும் இவர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் – II தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முகாமைத்துவ உதவியாளர் சேவையின்-II ஆம் தர பதவிகளில் சேவையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் தபால் திணைக்களத்தில் சேவையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்படும் பிரசவ விடுமுறை, வருடாந்த விடுமுறை, மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் அலுவலக வசதிகள் போன்ற சிறப்புரிமைகள் மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இது தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1863/2021

கௌரவ பிரேமலால் ஜயசேகர,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரிக்காக நிறைவேற்றப்படும் வகிபங்கு யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் பிரதேச அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வலுவலகங்கள் அமைந்துள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த ஒவ்வொரு பிரதேச அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை மேற்படி ஒவ்வொரு பிரதேச அலுவலகத்தினாலும் செயற்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் அமைச்சிடமிருந்து கோரப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கென பிரதேச அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களினாலும் சேவை வழங்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவானது நியாயமான முறையில் பங்கிடப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்த முடியுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 ஒக்டோபர் 06, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

285/2020

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமாகம – முனசிங்க நிறுவனத்துக்குச் சொந்தமான 12 ஏக்கர் காணி இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்துக்குச் சுவீகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அதன்போது ஒரு ஏக்கருக்கு ரூ 8,000,000/- வீதம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடத்தை நிர்மாணிப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்ட குருநாகல் – மாதம்பே பிரதான வீதிக்கு அண்மித்ததாக அமைந்துள்ள காணிக்கு ஏக்கருக்கு ரூ. 2,000,000/- வீதம் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட காணியை சுவீகரிப்பதில் முறைகேடு ஏற்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனுடன் தொடர்புடைய தரப்புகளுக்கு ஏதிராக விசாரணை நடத்தப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு அண்மித்த காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் நிதியாளரும் பதிவாளரும் இரண்டு வார கால வெளிநாட்டு விஜயத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அங்கீகாரம் அளித்த தரப்பு யாதென்பதையும்;

(iv) மேற்படி விஜயத்தின் தேவை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி விஜயத்திற்கு அரச நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

309/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவரின் பெயர் என்ன;

(ii) மேற்படி தலைவர் இதற்கு முன்னர் வகித்துள்ள பதவிகள் யாவை;

(iii) அவரது கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கான பதவிகளுக்கு நியமிக்கையில், புலமையாளர்கள் குழுவினால் தகைமைபடைத்த நபர்கள் தெரிவு செய்யப்படுவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளமையை அவர் அறிவாரா;

(ii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவரின் நியமனம் மேற்குறிப்பிட்ட வாக்குறுதிக்கு இசைவாக்கம் பெறுவது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

513/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பௌத்த பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகங்களை கல்வி அமைச்சின் நிருவாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இலங்கையின் பௌத்த பல்கலைக்கழகங்களின் தரத்தை உயர்த்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

617/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டெங்கு நுளம்பு அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக டெங்கு குடம்பி கட்டுப்பாட்டு உதவியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட டெங்கு குடம்பி கட்டுப்பாட்டு உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்தையும்;

(iii) இன்றளவில் இவர்கள் சேவையை விட்டுச் சென்றுள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

765/2020

கௌரவ சாந்த பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உள்நாட்டு ஆடைத்தொழில்துறையை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தை வலுவூட்ட முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற கைத்தறி நெசவுக் கைத்தொழிற்சாலைகளில் இன்றளவில் இயங்குநிலையில் இல்லாத கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக் கைத்தொழிற்சாலைகளை மீள ஆரம்பிப்பதற்காக வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1416/2021

கௌரவ தவராஜா கலை அரசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தின் கீழுள்ள திருக்கோவில் வைத்தியசாலைக்குத் தேவையான வளங்கள் இதுவரை உரிய முறையில் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையின் மகப்பேறு மற்றும் பெண் நோயியல் பிரிவுக்குத் தேவையான வசதிகள் இன்மையின் காரணமாக கர்ப்பிணித் தாய்மார் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையில் ஊழியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அவ்வைத்தியசாலைக்குத் தேவையான வளங்களும் வசதிகளும் எப்போது வழங்கப்படும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1431/2020

கௌரவ உத்திக பிரேமரத்ன,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் ஹபரண நகரை மையப்படுத்தி சுற்றுலா வலயமொன்று நிறுவப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வலயத்துக்குரிய காடுகளையும் அந்த வலயத்தில் நடமாடும் காட்டு யானைகளையும் பாதுகாக்கும் வகையில் மேற்படி சுற்றுலா வலயத்தில் பௌதீக அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கு சாத்தியகூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறான ஆய்வொன்றின் மூலம் முறை சார்ந்ததாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் மேம்படுத்தப்பட்ட சுற்றுலா வலயமாக ஹபரண நகரை அபிவிருத்தி செய்வதற்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1438/2021

கௌரவ அமரகீர்த்தி அதுகோரல,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையை அறுநூறு வரை அதிகரிப்பதற்கானதொரு யோசனை கடந்த அரசாங்க காலப்பகுதியில் முன்வைக்கப்பட்டதென்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களுள் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்கள் என்ன தரங்களுக்கமைவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) திறந்து வைக்கப்பட எஞ்சியுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) மேற்படி பொலிஸ் நிலையங்களுள் பொலன்னறுவை மாவட்டத்திற்குரிய பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 ஒக்டோபர் 07, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

289/2020

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வெற்றிலைக்கு அதிக கேள்வி நிலவுகின்றதென்பதையும்;

(ii) ஏற்றுமதி பயிராக வெற்றிலையை விரிவாக்குவதற்கு பொருத்தமான சூழல் இலங்கையில் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வெற்றிலைச் செய்கையை இலங்கையில் விரிவாக்குவதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வெற்றிலை ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ஒவ்வொரு ஆண்டுக்கமைய எவ்வளவென்பதையும்;

(ii) வெற்றிலை ஏற்றுமதி மூலமான வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

311/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை உலக சந்தையில் எரிபொருளின் விலை உயர்வடைந்த மற்றும் குறைவடைந்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) குறிப்பிட்ட விலை மாற்றங்களுக்கு ஒப்பீடாக இலங்கையில் எரிபொருளின் விலையைத் திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்ததன் நன்மையை இலங்கையின் பாவனையாளர் மக்களுக்கு வழங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

466/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையில் உருவாக்கப்பட்ட புதிய தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையின் தொழிலின்மை விகிதம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி காலப்பகுதியில் ஏற்பட்ட தொழிலின்மை விகிதத்தின் வேறுபாடு யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையின் நீண்டகால உற்பத்தி இயலளவில் நிகழ்ந்த வேறுபாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

514/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக புதிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கை தொடர்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கை தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

644/2020

கௌரவ நலீன் பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாப்பதற்கு இன்றளவில் வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்களை வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாப்பதற்கு வேறு திட்டங்கள் இருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

649/2020

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் அக்மீமன தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள வட்டரெக்க, ஹீன்பெந்தல, கலேகான, மாம்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் வசிக்கின்ற மக்களில் சுமார் 80% பேர் தமது வாழ்க்கைத் தொழிலாக செதுக்குக் கலையில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும்;

(ii) கொவிட்-19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியானது மேற்படி செதுக்குக் கலைஞர்களின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காலி மாவட்டத்தில் வசிக்கின்றதும் தமது வாழ்க்கைத் தொழிலாக செதுக்குக் கலையில் ஈடுபட்டுள்ளதுமான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கையானது பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி செதுக்குக் கலைஞர்களின் வாழ்க்கை நிலைமையினை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

948/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தின், பிரதேச சபை அதிகாரப் பிரதேசமொன்றான நெடுந்தீவின் பிரதான போக்குவரத்துப் பாதையாக கடல்வழிப்பாதை அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தீவில் இயங்கி வருகின்ற 'நெடுந்தாரகை' எனும் பயணிகள் போக்குவரத்துப் படகில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் பதவி, நியமனத் திகதி மற்றும் சேவை அடிப்படை என்பன தனித்தனியே யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலுவலர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் யாரால் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) வில்லியம் ஜேசுதாசன் அன்ரனி ராஜ், சிந்தாகுலம் மெல்கியாஸ் மிலன், அல்பிரட் மரியதயாளன், அன்ரனி அமலதாஸ், அன்ரூஸ் ரகீம்லயோன் ஆகிய அலுவலர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் அடிப்படையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

988/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு நகரில் சில பிரசேதங்களில் கம்பி வடங்களைப் பயன்படுத்தி மின்சார இணைப்பு வழங்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இந்த இணைப்பினை வழங்குவதற்காக இலங்கை மின்சார சபை அதிகூடிய நிதியை அறவிடுகின்றது என்பதையும்;

(iii) இப்பணத்தொகையை குறைந்த வருமானம் பெறுவோருக்கும் நடுத்தர குடும்பத்தினருக்கும் தாங்கிக்கொள்வது சிரமம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறைந்த வருமானம் பெறுவோரதும் நடுத்தர வகுப்பினரதும் வீடுகளுக்கு சலுகை விலையில் மின்சார இணைப்பினை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுமா;

(ii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாது;

(iii) இன்றேல், அவர்களுக்கு சலுகை விலையில் மின்சார இணைப்புக்களை வழங்கக்கூடிய மாற்று வழிமுறைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1403/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளில் நிறைவு செய்யப்பட்ட பகுதியின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதனை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பரா?

(ஆ) (i) கடந்த அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டிருந்தவாறு மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது தொடர்பில் தெளிவுப்படுத்த முடியுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற இடங்களில் ஏலவே திட்டமிடப்பட்டவாறு தூண்கள் மீது இந்த சாலை நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) திட்டமிடப்பட்டவாறு இன்றளவில் இந்த சாலையின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1830/2021

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக கடந்த அரசாங்கத்தில் ஆளும் தரப்பைப் பிரதிநிதித்துவம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி செலுத்தலுக்கு சட்டரீதியான அடிப்படை உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவைச் செலுத்திய அமைச்சின்/அலுவலகத்தின் பெயர் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நடப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேற்படி கொடுப்பனவைச் செலுத்துவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் இன்றளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 ஒக்டோபர் 08, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

292/2020

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரக்கு உற்பத்தி கைத்தொழிலாளர்கள் இன்றளவில் அக்கைத்தொழிலை விட்டு ஒதுங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதிலும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிலின் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையின் அரக்கு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2019 ஆம் ஆண்டில் அதன் மூலம் ஈட்டப்பட்ட வெளிநாட்டு வருமானம் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் அரக்கு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படாத பட்சத்தில் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எப்போது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கையில் அரக்கு உற்பத்திகளுக்கென சந்தையை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

312/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பாக அமைச்சுக்குக் கிடைத்துள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றுக்கு மத்தியில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு மத்தியில் இன்றளவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்கள் தனித்தனியாக யாவை;

(v) இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்களை துரிதமாக ஆரம்பிப்பதற்கு அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

672/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் காணப்படும் பீடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பீடங்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு பீடங்களிலும் நடத்தப்படும் பாடநெறிகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடநெறியையும் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) தற்போது இப்பல்கலைக்கழகத்தினால் விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை யாது;

(vi) மேற்படி பல்கலைக்கழகத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

743/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அநுராதபுரம், கெபித்திகொல்லாவ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ரத்மல்கஹவெவ சந்தியிலிருந்து கிவுலேகட சந்தி வரையிலான சுமார் 10 கி.மீ நீளமுடைய வீதிப் பகுதி மிகவும் மோசமான நிலையில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிப்பகுதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி வீதிப் பகுதியின் புனரமைப்புப் பணிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

756/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் —

(i) மாகாண சபை நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளின் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

934/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லியவளை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 22 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கும் அஞ்சல் அலுவலகம் தற்காலிக கட்டிடமொன்றில் இயங்கி வருகின்றதென்பதையும்;

(ii) இதற்கென 20,000/- ரூபா மாதாந்த வாடகை செலுத்தப்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி அஞ்சல் அலுவலகத்திற்கு நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணித்துத் தருமாறு மக்களும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முல்லியவளை பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்காக தரமான அஞ்சல் சேவையை வழங்குவதற்கு மேற்படி அஞ்சல் அலுவலத்திற்கென நிரந்தர கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி கட்டிடம் எப்போது நிர்மாணிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1064/2020

கௌரவ அசோக்க பிரியந்த,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திற்கான கற்பிட்டி குடாநாட்டில் மாதுளை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதனை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், தற்போது அங்கு மாதுளை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப் பரப்பு யாது;

(iii) அங்கு மாதுளை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்விவசாயிகளுக்கு உரிய தொழில்நுட்ப அறிவுரைகள் கிடைக்கப்படாமை மற்றும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள் உள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1109/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல், பெல்லன்தெனிய பிரதேசத்தில் நடாத்திச்செல்லப்படுகின்ற இயோன் லங்கா நிதி நிறுவனமானது இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதா;

(ii) அந்நிறுவனத்தில் வைப்புச் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஓய்வு பெற்ற படை வீரர்கள் என்பதை அறிவாரா ;

(iii) அந்நிறுவனத்தில் பணம் வைப்புச் செய்துள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iv) அவ்வைப்பாளர்களின் வைப்புத் தொகையை மீளவும் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1281/2020

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை, செவனகல பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர அல்லது தற்காலிக வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களுள் காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்படும் காணிகளுள் காணி அமைச்சிற்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத காணிகளில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வீடுகளை அமைத்து அவற்றில் குடும்பங்கள் குடியிருப்பதனை அவர் அறிவாரா?

(ii) ஆமெனில், மேற்படி குடும்பங்கள் குடியிருக்கும் காணிகளுள் காணி அமைச்சிற்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) அனுமதிப்பத்திரம் இல்லாத காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வேலைத்திட்மொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1336/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை;

(ii) அம்மாவட்டத்தில் தற்போது பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை;

(iii) அதற்கமைவாக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(iv) அம்மாவட்டத்திலுள்ள மொத்த சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை;

(v) அம்மாவட்டத்தில் கடந்த அரசாங்கத்தினால் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள புதிய சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி பயனாளிகளைத் தெரிவுசெய்யும் போது பின்பற்றப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?